## பெரியாழ்வார் அருளிச் செய்த
# பெரியாழ்வார் திருமொழி 2-4 - வெண்ணெய் அளைந்த[1]
## (கண்ணனை நீராட அழைத்தல்)

152 * வெண்ணெய் அளைந்த குணுங்கும் * விளையாடு புழுதியும் கொண்டு *
திண்ணென இவ்விரா உன்னைத் * தேய்த்துக் கிடக்க நான் ஒட்டேன் **
எண்ணெய்ப் புளிப் பழம் கொண்டு * இங்கெத்தனை போதும் இருந்தேன் *
நண்ணல் அரிய பிரானே! * நாரணா! நீராட வாராய்! 1

153 கன்றுகள் ஓடச் செவியில் * கட்டெறும்பு பிடித்திட்டால் *
தென்றிக் கெடுமாகில் * வெண்ணெய் திரட்டி விழுங்குமா காண்பன் **
நின்ற மராமரம் சாய்த்தாய் * நீ பிறந்த திருவோணம் *
இன்று நீ நீராட வேண்டும் * எம்பிரான்! ஓடாதே வாராய்! 2

154 பேய்ச்சி முலை உண்ணக் கண்டு * பின்னையும் நில்லாது என் நெஞ்சம் *
ஆய்ச்சியர் எல்லாரும் கூடி * அழைக்கவும் நான் முலை தந்தேன் **
காய்ச்சின நீரொடு நெல்லி * கடாரத்தில் பூரித்து வைத்தேன் *
வாய்த்த புகழ் மணிவண்ணா! * மஞ்சனமாட நீ வாராய்! 3

155 கஞ்சன் புணர்ப்பினில் வந்த * கடிய சகடம் உதைத்து *
வஞ்சகப் பேய் மகள் துஞ்ச * வாய் முலை வைத்த பிரானே! **
மஞ்சளும் செங்கழுநீரின் * வாசிகையும் நாறு சாந்தும் *
அஞ்சனமும் கொண்டு வைத்தேன் * அழகனே! நீராட வாராய்! 4

156 அப்பம் கலந்த சிற்றுண்டி[2] * அக்காரம் பாலில் கலந்து *
சொப்பட நான் சுட்டு வைத்தேன் * தின்னல் உறுதியேல் நம்பீ! **
செப்பிள மென்முலையார்கள் * சிறு புறம் பேசிச் சிரிப்பர் *
சொப்பட நீராட வேண்டும் * சோத்தம் பிரான்! இங்கே வாராய்! 5

157 எண்ணெய்க் குடத்தை உருட்டி * இளம் பிள்ளை கிள்ளி எழுப்பி *
கண்ணைப் புரட்டி விழித்துக் * கழகண்டு[3] செய்யும் பிரானே! **
உண்ணக் கனிகள் தருவன் * ஒலிகடல் ஓத நீர் போலே *
வண்ணம் அழகிய நம்பீ! * மஞ்சனமாட நீ வாராய்! 6

158 கறந்த நற்பாலும் தயிரும் * கடைந்துறி மேல் வைத்த வெண்ணெய் *
பிறந்ததுவே முதலாகப் * பெற்றறியேன் எம்பிரானே! **
சிறந்த நற்றாய் அலர் தூற்றும் * என்பதனால் பிறர் முன்னே *
மறந்தும் உரையாட மாட்டேன் * மஞ்சனமாட நீ வாராய் 7

[1] திருமஞ்சன காலத்தில் சேவிக்கப்படுவது / இது நித்யாநுஸந்தாநம்
[2] சிற்றுண்டை
[3] கழைகண்டு

159 கன்றினை வாலோலை கட்டிக் * கனிகள் உதிர எறிந்து *
பின் தொடர்ந்தோடி ஓர் பாம்பைப் * பிடித்துக் கொண்டாட்டினாய் -
போலும் **
நின் திறத்தேன் அல்லேன் நம்பீ! * நீ பிறந்த திரு நல்நாள் *
நன்று நீ நீராட வேண்டும் * நாரணா! ஓடாதே வாராய்! 8

160 பூனித் தொழுவினில் புக்குப் * புழுதி அளைந்த பொன் மேனி *
காணப் பெரிதும் உகப்பன் * ஆகிலும் கண்டார் பழிப்பர் **
நாண் எத்தனையும் இலாதாய்! * நப்பின்னை காணில் சிரிக்கும் *
மாணிக்கமே! என் மணியே! * மஞ்சனமாட நீ வாராய்! 9

161 * கார்மலி மேனி நிறத்துக்[4] * கண்ண பிரானை உகந்து *
வார்மலி கொங்கை யசோதை * மஞ்சனமாட்டியவாற்றை **
பார்மலி தொல் புதுவைக் கோன் * பட்டர் பிரான் சொன்ன பாடல் *
சீர்மலி செந்தமிழ் வல்லார் * தீவினை யாதும் இலரே 10

**அடிவரவு:** வெண்ணெய் கன்றுகள் பேய்ச்சி கஞ்சன் அப்பம் எண்ணெய் கறந்த கன்றினை பூணி கார்மலி பின்னை

[4] நிறத்தன்